**8.38 பணியமைப்பு – ஊரக வளர்ச்சித்துறை – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பணியிடங்களில், கருணை அடிப்படையில் தற்காலிகமாகப் பணி அமர்த்தப்படுபவர்களை, முறையாகப் பணி அமர்த்துவதில் ஏற்படும் காலதாமதம் மற்றும் முறைகேடுகள் – தவிர்ப்பதற்கான வழிமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.**

ஊரக வளர்ச்சித்(இ5)துறை

அரசாணை (நிலை) எண். 191 நாள் : 10.6.97

அரசாணை (நிலை) எண். 164, ஊரக வளர்ச்சித்துறை, நாள் : 7.8.96

**ஆணை :**

கருணை அடிப்படையில் நியமனம் பெற்றவர்களது பணிவரன்முறை வருடக் கணக்கில் நிலுவையில் உள்ளதாக அரசின் கவனத்திற்கு பல்வேறு முறையீடுகள் வந்துள்ளன. அரசு இது குறித்து ஆதரவு செய்தது.

2. பணியில் இருக்கும் போது காலமான அரசு / ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் வாரிசுகளான, கருணையின் அடிப்படையில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய வரம்புக்குட்பட்ட பணி இடங்களில் பணி அமர்த்தும் திட்டப்படி, காலமான பணியாளரின் குடும்பம் வறிய நிலையில் இருந்தால் அக்குடும்பத்திற்கு உடனடி உதவி கிடைக்க வேண்டும் என்பதற்காக, அக்குடும்பத்தில் ஒருவரை நியமன அலுவலரே தற்காலிகமாகப் பணியமர்த்திவிட்டு பின்னர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெற்று முறையாகப் பணி அமர்த்தும் வகையில் நியமன விதிமுறைகள் உரிய வகையில் தளர்வு செய்யப்பட்டுள்ளன. ஒதுக்கீடு தொடர்பான விதிகளிலிருந்தும் பொது விலக்களிக்கப்பட்டுள்ளது. தற்காலிகமாகப் பணி அமர்த்தியபின் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறுவதற்கு, தேர்வாணைய வரம்புக்குட்பட்ட பணியிடங்களுக்கு பணியாளர் தேர்வு மற்றும் தேர்வாணையத்துடன் அரசு அளவில் தொடர்பு கொள்ள வேண்டும் என்ற நடைமுறைக்கு ஏற்ப, இதற்கான முன்மொழிவுகளை அரசு தேர்வாணையத்திற்கு அனுப்பி இசைவு பெறும் நடைமுறையை மாற்ற இயலாது.

3. ஏற்கெனவே 23.12.93 நாளிட்ட வேலை வாய்ப்புத்துறை கடித (நிலை) எண். 114 மற்றும் 9.10.91 நாளிட்ட தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை கடித (நிலை) எண். 282 ஆகியவற்றில் கருணை அடிப்படையில் தற்காலிக பணி நியமனம் அளிக்கப்பட்ட உடனேயே சம்பந்தப்பட்ட நபரின் பணியினை வரன்முறை செய்ய உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு அரசிற்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட வேண்டும் என்று அறிவுரைகள் வழங்கப்பட்டும் கூட தேர்வாணையத்தின் இசைவு பெறுவதற்காக அரசுக்கு, வரப்பெறும் முன்மொழிவுகளைப் ஆராய்ந்து பார்க்கும்போது, பெரும்பாலான நிகழ்வுகளில் முன்மொழிவுகள் பல ஆண்டுகள் கடந்த பின்னர்தான் அரசுக்கு அனுப்பப்படுகின்றன என்றாலும் அப்படி வரப்பெறும் முன்மொழிவுகளும் முழு விவரங்களைக் கொண்டதாக அமையவில்லை என்பதும் கண்கூடாக தெரிகிறது. முன்மொழிவுகள் முழுமையான விபரங்களை கொண்டிராததால், அரசு, தெளிவுரைகளும் கூடுதல் விபரங்களும் கேட்க வேண்டியுள்ள நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மேலும், அரசு கோரும் தெளிவுரைகளும், கூடுதல் விபரங்களும் உடனடியாக அரசுக்கு கிடைக்கப்பெறுவதில்லை. பல நிகழ்வுகளில், வருமானச் சான்று சொத்து சான்று போன்ற முக்கிய சான்று குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்பதற்கான சான்று போன்ற முக்கிய சான்றுகள் பெற்று ஆய்வு செய்து, நியமனம் அளிக்க வேண்டிய நியமன அலுவலர்கள், இச்சான்றுகளை நியமனத்திற்குப் பின்னரே பெற்று பணிவரன்முறைக்காக அரசுக்கு அனுப்புகின்றனர். இச்சான்றுகளைப் பெற்று ஆய்வு செய்யாது நியமனம் செய்வது, எவ்வாறு கருணை அடிப்படையிலான வகை நியமனம் என கருத முடியும்; அவை முறையற்ற நியமனங்களே ஆகும். வேறுவகை விதி மீறல்களும் நடைமுறையில் உள்ளன. பணியில் இருக்கும் போது காலமானவர் குடும்பம் உண்மையிலேயே வறிய நிலையில் இருந்தால் இறந்த அரசு ஊழியரின் மனைவி உடனடியாக வேலை கோருவார் அல்லது பள்ளியிறுதி வகுப்பு வரை படித்துள்ள மகன் / மணமாகாத, மகளுக்கு வேலை கோருவார் ஏனெனில் பள்ளியிறுதி வகுப்பு தேர்ச்சியே இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் பெற போதிய கல்வித் தகுதியாகும். அவ்வாறில்லாமல், மேல்நிலைக் கல்வி படித்து அதின், பின்னர் பட்டப்படிப்பு போன்ற உயர் கல்வி முடித்து அரசு ஊழியர் இறந்து பல ஆண்டுகள் கழித்து பணி வாய்ப்பு கோரியவர்களுக்கும் நியமனம் அளித்துள்ள நிகழ்வுகள் பல உள்ளன. பல

நிகழ்வுகளில் எந்த நாளில் நியமனம் கோரி விண்ணப்பிக்கப்பட்டது என்பதற்கான ஆதாரம்கூட அனுப்பப்படுவதில்லை. இது போன்ற அரசு ஊழியர் இறந்து பல ஆண்டுகள் கழித்து பணி நியமனம் கோரும் பின்னரே பணி நியமனம் வழங்கப்பட வேண்டும். மேலும், இறந்த அரசு ஊழியரின் மூத்த மகன் / மகள் எவரேனும் அவர் இறக்கும் முன்னர் அரசு / தனியார் துறையில் நிரந்தரப் பணியில் பணிபுரிந்து வந்து அரசு ஊழியர் இறக்கும் பொழுது மணமாகாமல் இருந்தால், அவரால் அக்குடும்பத்திற்கு உதவி கிடைத்து வருகின்றது என்றுதான் கருத வேண்டுமொழிய அவரால் குடும்பத்திற்கு எவ்வித உதவியுமில்லையென்று தீர்மானித்து மற்றொருவருக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கூடாது. இத்தகைய இனங்களில் ஏதேனும் சந்தேகமிருப்பின் அரசின் தெளிவுரை பெற்ற பின்னரே நியமனம் அளிக்க வேண்டும்.

4. மேற்குறிப்பிட்ட நிலையில், தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பதவிகளில், கருணையின் அடிப்படையில் தற்காலிகமாக பணி அமர்த்தப்பட்டவர்களை முறையாகப் பணி அமர்த்துவதில், இனி வருங்காலங்களில், காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டு, அரசு, கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பிக்கின்றது.

அ) கருணையின் அடிப்படையில், பணி வாய்ப்பு கோரி விண்ணப்பங்கள் வரப்பெற்றால், தற்காலிகமாக நியமனம் அளித்து ஆணையிடு முன்னரே, விதிமுறைகள்படி தேவையான சான்றுகள், உறுதிமொழி, போன்றவையும் பெற்று ஆய்வு செய்து, அதன் பின்னரே நியமன ஆணைகள் வெளியிட வேண்டும். பத்தி 3ல் குறிப்பிட்டுள்ளது போன்ற குறைபாடுகள் நிகழா வண்ணம் நியமன அலுவலர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆ) தேர்வாணையை வரம்புக்கு உட்பட்ட பதவிகளில், யாரையேனும் கருணையின் அடிப்படையில் பணிவாய்ப்பு வழங்கும் திட்டப்படி, தற்காலிகமாகப் பணி அமர்த்தி ஆணையிட்டால், அதன்படி ஆணையிடும் நியமன அலுவலர், ஆணையிட்ட ஒரு மாத காலத்திற்குள் முறையாகப் பணி அமர்த்துவதற்கு, தேர்வாணையத்தின் இணை வளர்ச்சி இயக்குநர் வழியாக அனுப்ப வேண்டும். காலதாமதம் ஏற்பட்டால் அதற்குப் பொறுப்பானவர்கள் மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இ) ஒவ்வொரு மாதமும் எத்தனை நபர்கள் கருணையின் அடிப்படையில் தேர்வாணைய வரம்புக்கு உட்பட்ட பதவியில் தற்காலிகமாகப் பணி அமர்த்தப்பட்டனர். அவர்களை முறையாகப் பணியமர்த்துவதற்கான முன்மொழிவு குறித்த காலத்தில் விதிமுறைகள் சரியாக கடைபிடிக்கப்பட்டுள்ளதா என்பதை ஊரக வளர்ச்சி இயக்குநர் கண்காணிக்க வேண்டும். இதன் பொருட்டு காலமுறை அறிக்கை நிர்ணயித்து அவர், ஆய்வு செய்யலாம் காலதாமதம் மற்றும் முறைகேடுகள் காணப்பட்டால், உடனே பொறுப்பு நிர்ணயித்து ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள அவர், அறிவுரை வழங்க வேண்டும்.

ஈ) ஒவ்வொரு ஆண்டும் தேர்வாணைய வரம்புக்குட்பட்ட பதவிகளில் எத்தனை கருணை அடிப்படையிலான நியமனங்கள் செய்யப்பட்டன; அவை அனைத்துக்கும் முறையாகப் பணி அமர்த்துவதற்கான முன்மொழிவு அரசுக்கு குறித்த காலத்தில் அனுப்பப்பட்டதா ? காலதாமதம், முறைகேடுகள் ஏதேனும் நிகழ்வுகளில் காணப்பட்டதா ? அதன் பொருட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா ? அதன் விளைவு என்ன ? என்பது போன்ற மாவட்டவாரியான விவரங்களுடன், ஆண்டறிக்கை ஒன்றை, ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31–க்குள் ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

உ) காலதாமதத்துடன் அனுப்பப்படும் முன் மொழிகளுடன் அதற்கு பொறுப்பானவர்கள் யார் அவர்கள் மீது மேற்கொண்ட ஒழுங்கு நடவடிக்கை என்ன, போன்ற ‘‘விபரங்களையும் முன்மொழிகளுடன் சேர்த்து அரசுக்கு அனுப்ப வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எஸ். நாராயண்,**

அரசுச் செயலர்